## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No.31/2012 | Date : 10.04.2023 | DW2 |
|---|---|---|
| Name: மே.வை.சண்முகராஜா | S/o. **வையாபுரி** | |
| Evidence Recorded Time: 03.13 P.M. to 03.45 P.M. | | |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-**

வழக்கு சொத்தில் ஒரு பகுதியில் வாதி குடியிருந்த பகுதிக்கான கதவு எண் தெரியுமா என்றால் வாதி வழக்கு சொத்தில் குடியிருக்கவே இல்லை. வாதி வாடகைக்கு கொடுத்திருந்த பகுதியின் கதவு எண் தெரியுமா என்றால் 146, 147 ஆகும். வாடகைக்கு விடாத பகுதியின் கதவு எண் என்ன என்றால் 145 ஆகும். கட்டிடம் கட்டுவதற்கு உண்டான செலவுகளை வாடகையில் கழித்து கொள்ளவேண்டும் என்று போடப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் கட்டிடம் கட்டி வாடகைக்கு இருந்தார்கள் என்றால் சரிதான். அவ்வாறு யார் வாடகைக்கு இருந்தார்கள் என்றால் மாணிக்கம் என்பவர் இருந்தார். மாணிக்கம் அப்பா பெயர் தெரியாது. மேற்படி ஒப்பந்தம் எப்போது எழுதப்பட்டது என்றால் 1996 ல் போடப்பட்டது, தேதி, மாதம் தெரியாது. மேற்படி ஒப்பந்தம் மாணிக்கத்திற்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையில் போடப்பட்டது. மேற்படி ஒப்பந்ததை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றாலும் கட்சி எந்த ஒரு ஒப்பந்ததையும் போடவில்லை என்றாலும், வாதிக்கும், மாணிக்கத்திற்கும் இடையே தான் தனிப்பட்ட முறையில் ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் அது தவறாகும். அதனால் தான் மாணிக்கத்தின் அப்பா பெயரை என்னால் கூறமுடியவில்லை என்றால் சரியல்ல. வாதியை எந்த தேதியில் கட்சியில் இருந்து நீக்கினார்கள் என்றால் நினைவில்லை. 07.02.2012-ல் வாதியை கட்சியில் இருந்து நீக்கிவிட்டார்கள் என்ற விவரம் தெரியவந்த பிறகு வாதியின் வீட்டில் கட்சி சம்மந்தப்பட்ட கூட்டங்கள் நடைபெறக்கூடாது என்று கட்சியில் உள்ளவர்களிடம் வாதி தெரிவித்தார் என்றால் அவ்வாறு கூறவில்லை. வழக்கின் 1ம் பிரதிவாதி பெயரில் சொத்துக்களை எழுதிக்கொடுத்துவிட்டு சென்று விடவேண்டும் என்று வாதியை மிரட்டினார்கள் என்றால் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. கட்சியின் அனைத்து நிகழ்வுகளிலும் நான்

இருந்தேன், அவ்வாறு எந்த நிகழ்வும் நடைபெறவில்லை. வழக்கு தாக்கல் செய்யும் காலம் வரை வாடகையை யார் பெற்றுவந்தார் என்றால் முதலில் வாதி ராஜகோபால் பெற்றுவந்தார், அதற்கு பின்பு நான் பெற்றுவந்தேன், எப்போது என்று தெரியாது, சாட்சி மீண்டும் 1998–ம் ஆண்டிலிருந்து என்று கூறுகிறார். 1998–ம் ஆண்டு முதல் 2012–ம் ஆண்டு வழக்கு தொடரும் வரை நான் வாடகை பெற்றதற்கான ஆவணங்களை ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாடகையை வாதியிடம் கொடுக்ககூடாது என்றும் எங்களிடம் தான் கொடுக்கவேண்டும் என்று மிரட்டினோம் என்றால் அவ்வாறு மிரட்டவில்லை. 10.02.2012–ல் நான் எந்த பொறுப்பிலும் இல்லை, கட்சி உறுப்பினராக இருந்தேன். 10.02.2012–ல் வாதிக்கும் கட்சி சம்மந்தப்பட்ட பொறுப்பாளருக்கும் இடையில் நடைபெற்ற நிகழ்வுகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அன்று 1–ம் பிரதிவாதியான தங்கவேலு வாதியிடம் என்ன கேட்டார் என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் கட்சி அலுவலகத்தினை பொறுத்து ராஜகோபால் தொந்தரவு செய்யக்கூடாது என்று கூறினார். வழக்கில் ராஜகோபால் 10.02.2012–ல் நடைபெற்ற நிகழ்வு குறித்து என்ன சொல்லியுள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அன்றைய தேதியில் வழக்கின் 1ம் பிரதிவாதியான பொறுப்பில் இருந்தவர் வழக்கு சொத்துக்களை உடனடியாக தன்னுடைய பெயருக்கு பெயர் மாற்றம் செய்து தரவேண்டும் என்றும் இல்லாவிட்டால் அடுத்த நாள் 11.02.2012 அன்று அடியாட்களையும், ரவுடிகளையும் அழைத்து வந்து வழக்கு அ அயிட்ட சொத்துக்களை கைப்பற்றுவோம் என்றும் முடிந்தால் தடுத்துக்கொள் என்று சவால்விட்டார் என்றாலும் , அப்போது நானும் உடன் இருந்ததேன் என்றாலும் சரியல்ல. அவ்வாறு மிரட்டி சென்ற அன்றே வாதி மேட்டுர் துணை காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி விவரம் எனக்கு தெரியும் என்றாலும், அந்த விசாரணை நிலுவையில் இருக்கும் போதே வழக்கு 3ம் பிரதிவாதி மற்றும் அவருடைய ஊரை சேர்ந்த அடியாட்களை அழைத்து சென்று வழக்கு சொத்தில் அத்துமீறி உள்ளே நுழைந்து பூட்டை உடைத்து உள்ளே சென்று வாதியை பார்த்து இந்த சொத்து முழுவதும் எங்களுக்கு தான் சொந்தம் என்றும் எதாவது கேள்வி கேட்டால் உயிரோடு விடமாட்டோம் என்று கொலை மிரட்டல்கள் விடுத்தார்கள்

என்றால் அவ்வாறு எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை. வாதி தனிநபராக இருந்ததாலும் நாங்கள் கூட்டமாக சென்றதாலும் வாதியால் எதுவும் செய்ய இயலவில்லை என்றால் சரியல்ல, அது கற்பனையான ஒன்று ஆகும். வாடகைக்கு இருந்த நபர்களிடமும் அடியாட்களுடன் கூட்டமாக சென்று வாடகையை எங்களிடம் கொடுக்குமாறு மிரட்டினோம் என்றால் அவ்வாறு ஒரு சம்பவமே நடைபெறவில்லை. வழக்கு தாக்கல் செய்த காலகட்டத்தில் எத்தனை நபர்கள் வாடகைக்கு இருந்தார்கள் என்றால் மாணிக்கம், தொடக்கவேளாண்மை கூட்டுறவு சங்கம் ஆகியோர்கள் வாடகைக்கு இருந்தார்கள். தொடக்கவேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் யார் பெயரில் ஒப்பந்தம் போடப்பட்டுது என்றால் கிருஷ்ணன் பெயரில் போடப்பட்டது, எந்த தேதியில் போடப்பட்டது என்றால் தெரியாது. எந்த தேதியிலிருந்து எந்த தேதி வரையிலும் ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் மாணிக்கம் என்பவர்தான் கிருஷ்ணனிடம் ஒப்பந்தம் போட்டுக்கொண்டார். அதற்காண ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்திற்கான வாடகையினை கையில்தான் கொடுப்பார்கள். உண்மையில் கட்சிக்கு சொந்தமான சொத்தாக இருந்திருந்தால் கட்சியின் கணக்கில் வாடகை செலுத்தப்பட்டிருக்கும் என்றாலும் வாதிதான் தாவா சொத்தின் உண்மையான உரிமையாளர் என்பதால்தான் வாதியிடம் வாடகை கொடுக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. 2012-ம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்த பிறகு வாடகைதாரர்களிடம் இருந்து பெறப்பட்ட வாடகையினை கட்சி பெயரில் பெற்றுக்கொண்டோமா என்றால் இல்லை. வழக்கிற்கு பின்னிட்டும் அ அயிட்ட சொத்திற்கான வாடகையை வாதிதான் பெற்று வருகிறார் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளாக காட்டப்பட்டுள்ள நபர்கள் அனைவரும் கட்சியில் பொறுப்பில் உள்ளவர்கள் தான் என்றால் சரிதான். அந்த வகையில் ஆள்பலம், பணபலம், அடியாட்கள் பலம், கட்சி செல்வாக்கு ஆகியவற்றை வைத்து வாதியை தனிப்பட்ட முறையில் அனைத்து விதத்திலும் தொந்தரவு செய்ததால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எங்கிருந்தோ வந்த வாதி சொத்தை அடையக்கூடாது என்று கட்சியின் பெயரால் வாதியை தாக்கினோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் வகித்த பதவியின் அடிப்படையில் அவர்களுக்கும் வாதிக்கும் இடையில் வழக்கு போடுவதற்கு முன்பு வேறு நீதிமன்ற நடவடிக்கைகள் இருந்ததா என்றால் இல்லை.

2013–ம் ஆண்டில் சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் ஜூலை 2011 வாக்கில் வாதிக்கு எதிராக நீதிமன்றங்களில் கேவியட் மனுவை தாக்கல் செய்த விவரம் தெரியும். 4 ம் பிரதிவாதி அக்டோபர் மாதம் 2011–ல் ஒரு கேவியட் மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யும் காலகட்டத்தில் தங்கவேலு, வெற்றிவேல் இருவரும் கேவியட் மனு தாக்கல் செய்தார்கள் என்றால் கட்சியில் அவர்கள் வகித்த பதவிகளின் பெயரில் தாக்கல் செய்தார்கள். மேற்படி கேவியட் மனுக்களில் என்ன சொத்து விவரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. கட்சிக்கும் சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் கட்சி சொத்து என்று பொய்யாக கூறி 2011–ல் இருந்து ஒவ்வொரு கேவியட் மனுவாக தாக்கல் செய்து என்ன வழக்கு என்ற விவரம் தெரியாமல் வரிசையாக ஆள்மாற்றி ஆள் தாக்கல் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. 11.12.2012–ல் பிரதிவாதிகள், அடியாட்கள், ரவுடிகள் செய்த கொடுமைகளுக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் பொய்யாக ஜோடிக்கப்பட்ட ஒன்று ஆகும். வாதி புகார் கொடுத்ததால் வாதி மீது புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான். வாதி கொடுத்த புகாரில் இருந்து தப்பிக்கவேண்டும் என்ற நோக்கில் ஒரு பொய்யான புகாரை வாதி மீது கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வாதி கொடுத்த புகார் மீது எங்களுடைய அரசியல் செல்வாக்கு காரணமான சிவில் நீதிமன்றத்தில் பார்த்துகொள்ளுமாறு கூறினார்கள் என்றால் அவ்வாறு அல்ல. ஜீவானந்தம் அந்த காலகட்டத்தில் நங்கவள்ளி ஒன்றிய குழு தலைவராக இருந்தார் என்றால் சரிதான். அதனால் அவருடைய செல்வாக்கை பயன்படுத்தி கட்சியின் மாநில நிர்வாகிகள் காவல் துறையில் அவர்களுடைய செல்வாக்கை பயன்படுத்தி வாதி கொடுத்த புகாரின் மீது நடவடிக்கை எடுக்காமலும், வாதி பக்கம் நியாயம் இருப்பதால் நீதிமன்றத்தில் பார்த்துகொள்ளுமாறு கூறிவிட்டார்கள் என்றால் சரியல்ல. 5 ம் பிரதிவாதி 15.08.2017–ல் 4 ம் பிரதிவாதி 14.09.2020 லும் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். அவர்கள் கட்சியில் இருந்த காரணத்தினால் மட்டுமே அவர்கள் பெயர்களில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்பதால் அவர்கள் இறந்த பிறகு அவர்களுடைய வாரிசுகளை சேர்ப்பதற்கு அவசியம் இல்லை என்றால் சரிதான். 6–ம் பிரதிவாதி அந்த காலகட்டத்தில் இளவர் என்றால் சரிதான். புதுசாம்பள்ளி வழக்கு சொத்து இருக்கும் இடத்திற்கு செங்கொடி நகர் என்பதற்கான ஆதாரங்களை இதுவரை தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். HSD பட்டா என்பது அனுபவத்தின் அடிப்படையில் கொடுக்கப்படுவது என்றால் சரிதான். பி மெமோ என்பது என்ன என்று தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்திற்கு HSD பட்டா கொடுப்பதற்கு முன்பு வழக்கு சொத்துக்கள் யார் யார் பெயர்களில் இருந்தது என்பதற்கான குறிப்புகளை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அரசாங்க சொத்துக்களில் யார் அனுபவம் செய்து வருகிறார்களோ அவர்கள் தண்ட தீர்வை வரி செலுத்தி வருவது பி மெமோவில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் அதுபற்றி தெரியாது. நிலத்திற்கு கட்சி தண்ட தீர்வை செலுத்தியதற்கான எந்த ஆவணமும் இதுவரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் முழுவதும் வாதிக்கு முறையாக பாத்தியப்பட்ட பூரண உரிமை உடைய சொத்து என்றாலும், அதில் வாதி கட்சியில் பதவி வகித்த காலகட்டத்தில் அவருடைய வசதிக்காக கட்சி உறுப்பினர்களை வரவழைத்து பேசியதால் அது கட்சி சொத்தாகாது என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையில் ஆத்தூர் நரசிங்கபுரம் சொத்து குறித்து சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சொத்தை வாதி கட்சியின் சொத்து என்று எழுதிக்கொடுத்துவிட்டார் என்றாலும், அதனை வாதி தன்னுடையது என்று உரிமை கொண்டாவில்லை என்றாலும் சரிதான். கட்சியின் சொத்தாக இருந்ததால் அது கட்சியின் சொத்து என்று விட்டுவிடுவார் என்றாலும் அவருடைய சொத்தை கட்சிக்கு கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றாலும் சரியல்ல. உழவன் உரிமை என்ற புத்தகத்திற்கு சந்தா சேகரிக்க 1ம் பிரதிவாதி வசூல் செய்தாரா என்றால் செய்தார். அதில் 1ம் பிரதிவாதி ரூபாய் ஒரு லட்சத்திற்கு மேல் கையாடல் செய்துவிட்டதாக புகார் உள்ளது என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி கலப்பட பெட்ரோல் விற்பனை செய்யப்பட்டதற்காக தண்டிக்கப்பட்டவர் என்றால் சரிதான். 4 முதல் 6 பிரதிவாதிகள் பொது தொழிலாளர் சங்கம், விவசாயிகள் சங்கம் ஆகிய பெயர்களில் பணம் வசூல் செய்ததாக கட்சியில் புகார் கொடுக்கப்பட்டுது என்றால் அவ்வாறு இல்லை. பிரதிவாதிகள் பொதுமக்களின் பணத்தை கையாடல் செய்ததற்கான பிரதிவாதிகள் மீது வாதி கட்சி ரீதியாக நடவடிக்கை எடுத்ததால் பிரதிவாதிகள் அதனை மனதில் வைத்துக்கொண்டு வாதியின் சொத்துக்களை கட்சியின் சொத்துக்களை என்று கூறிவந்தார்கள் என்றால் சரியல்ல. சேலம் கேம்பில் இருந்த கட்சி சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால்

நினைவில்லை. அதன் அளவு தெரியுமா என்றால் நினைவில்லை. எப்போது அந்த சொத்து விற்பனை செய்யப்பட்டது என்றால் 1996, 1997-ம் ஆண்டு வாக்கில் விற்பனை செய்யப்பட்டது. மேற்படி விற்பனை பதிவு செய்யப்பட்டது ஆகும். மேற்படி சொத்தை யார் யாருக்கு விற்பனை செய்யப்பட்டது என்றால் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு மார்க்சிஸ்ட் கட்சி தனது பங்கு நிலத்தை விற்பனை செய்தது. அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எவ்வளவு தொகைக்கு விற்பனை செய்யப்பட்டது என்றால் சரியாக நினைவில்லை. விற்பனை செய்யும் போது மேற்படி இரண்டு கட்சிகளில் என்ன பொறுப்புகளில் இருந்தவர்கள் விற்பனை செய்தார்கள் என்றும், என்ன பொறுப்பில் இருந்தவர் வாங்கினார்கள் என்றும் தெரியுமா என்றால் இருவரும் மேற்படி இரண்டு கட்சியின் செயலாளர்கள் ஆவார்கள். விற்பனை செய்தவர் வாதி ராஜகோபால், வாங்கியர் கே.எஸ்.முத்து ஆவார். அந்த பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை. அந்த ஆவணம் குறித்து எந்த விவரங்களும் எனக்கு தெரியாது. சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் செயல்பட்டு வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. ஆவணங்களுக்கு எதிராக நான் அளிக்கும் சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. சொத்து முழுவதும் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றாலும், வாதி கோரிய பரிகாரங்களுக்கு வாதிக்கு தீர்ப்பாக வேண்டும் என்றாலும் சரியல்ல.

<u>மறுவிசாரணை –</u> இல்லை.

ஒம்/-DW2,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.